# யா / நடேஸ்வரக் கல்லூரி

## காங்கேசன்துறை

## பரிசளிப்பு விழா





# அதிபர் அறிக்கை 2019

# யா / நடேஸ்வரக் கல்லூரி

## காங்கேசன்துறை

# பரிசளிப்பு விழாவும்

# அதிபர் அறிக்கையும் – 2019

# யா/ நடேஸ்வரக் கல்லூரி
## காங்கேசன்துறை

### பரிசளிப்பு விழா – 2019

காலம் :- 09.07.2019 (செவ்வாய்க்கிழமை)
இடம் :– பாடசாலை மண்டபம்
நேரம் :– மு.ப 9.30 மணி

**தலைவர்**
திரு கு. விமலன்
(அதிபர்)

**பிரதம விருந்தினர்**
திரு. சி. துமிலன் (பழைய மாணவன்)
Group Chairman / CEO, ACA, ACCA,ACMA(UK), CGMA,CPMA (AUS), MCSI (UK),FMAAT(SL) ACS)

**சிறப்பு விருந்தினர்**
திரு .சி. மதியழகன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
முகாமைத்துவம், வலிகாமம் கல்வி வலயம்)

**கௌரவ விருந்தினர்**
திருமதி. ம. ரவீந்திரன்
(பழைய மாணவி, ஓய்வு பெற்ற ஆசிரியர்)

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை கௌரவித்தல்
- விருந்தினர்களை அழைத்து வரல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்பு உரை
- ஆசியுரை
- அதிபர் அறிக்கை
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- கலை நிகழ்ச்சிகள்
- நன்றியுரை

## அதிபர் அறிக்கை – 2019

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை மனதிலிருத்தி, எமது பாடசாலையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை வணங்கி, இக் கல்லூரியை நிறுவிய செம்மல் திரு. சி. தம்பிப்பிள்ளை அவர்களின் கல்விப் பணியினைப் போற்றி, 118 வருடங்களிற்கு மேலாக தழைத் தோங்கும் எமது பாடசாலையின் 2019ம் வருடத்திற்குரிய அதிபர் அறிக்கையினை சமர்ப்பிக்கின்றேன்.

இன்றைய நிகழ்விற்கு ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் எமது பாடசாலை ஆலயகுருக்கள் பிரம்மஸ்ரீ பா. கங்காதரசர்மா அவர்களே! எமது அன்பான அழைப்பை ஏற்று பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் "நடேஸ்வரன்" திரு. சிவராஜா துமிலன் அவர்களே!

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது வலயகல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சிவசம்பு மதியழகன் அவர்களே!

கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவியும் பகுதித் தலைவராக இருந்து 25.03.2019 ஆண்டு ஓய்வு பெற்ற திருமதி மணிமேகலை ரவீந்திரன் அவர்களே!

எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் சகோதர பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! எமது முன்னாள் அதிபர்களே! ஆசிரியர்களே! அயற் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! பெற்றோர்களே! பழையமாணவர்களே! பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களே! எமது பாடசாலை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து அர்ப்பணிப்போடு பாடுபட்டு வரும் பிரதி அதிபர் அவர்களே! சகோதர ஆசிரிய பெருந்தகைகளே! அன்பான கல்விசாரா ஊழியர்களே! மாணவ முதல்வர்களே! எனதருமை மாணவச் செல்வங்களே! மற்றும் நலன் விரும்பிகளே! உங்கள் அனைவருக்கும் வரவேற்புடன் கூடிய எனது மணங்கனிந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய நிகழ்விற்கு ஆசி வழங்கி அமர்ந்திருக்கின்ற எமது பாடசாலை ஆலயத்தின் குருக்கள் அவர்கள் எமது பாடசாலையின் பழைய மாணவர் ஆவார். சமூகத்ததுக்கெல்லாம் அறிமுகமான மதிப்பு மிக்கவர் எமக்கு பல வழிகளில் ஆலோசனை வழங்கி எமது பாடசாலை முன்னைய நிலையை வெகு சீக்கிரம் எட்ட வேண்டும் என வெகுவிருப்பம் கொண்டவர் அவர்களின்

ஆசீர்வாதமும் ஆதரவும் என்றென்றும் எமக்கும் எமது கல்லூரிக்கும் இருந்து கொண்டே இருக்கும்.

எமது அழைப்பிற்கு இணங்க பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்து கொண்டிருக்கும் பிரதம நிறைவேற்று அதிகாரி (Chairman Blue Ocean) திரு. சிவராஜா துமிலன் அவர்கள், எமது பாடசாலையின் பழைய மாணவன். கல்வி கற்கும் காலத்தில் சிறந்ததோர் மாணவனாக திகழ்ந்தார். பாடசாலையின் மீது பற்றும் விசுவாசமும் மிக்க மாணவனாக செயற்பட்டார். இவர் தொழிலின் நிமித்தம் கொழும்பில் வசித்து வருகிறார். இவர் தனது கல்வியில் பல பட்டங்களைப் பெற்று மிக உயர்ந்த இடத்தில் இருந்து வருகின்றார். கணக்கியல் துறையில் சிறந்து விளங்குகின்ற ஒரு கணக்கியலாளரும், விரிவுரையாளரும் ஆவார். அது மட்டுமன்றி இலங்கையிலும், வெளிநாடுகளிலும் பல உயர்தர கட்டிடங்கள் சிறந்த முறையில் அமைத்து தருகின்ற தொழிலை மேற்கொண்டு வருகின்றார்.

எமது பாடசாலை மீண்டும் பழைய இடத்திற்கு வந்த போது, புகையிரதப் பாதையின் பக்கம் எந்த விதமான தடுப்புச் சுவர் இன்றி காணப்பட்டது. எமது மாணவச் செல்வங்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கிழக்குப் பக்கமாக உள்ள 160 அடி நீளமான மதிலை கட்டித்தரும்படி கேட்ட போது எதுவித தயக்கமுமின்றி உடனடியாகவே அவ்வேலைத்திட்டதை நிறைவேற்றி பாடசாலையின் பாதுகாப்பையும் மாணவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி தந்த பெருமகனாவார். இன்று எமது பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிப்பது எம்மை எல்லாம் மகிழ்விக்கின்றது. அவர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

சிறப்புவிருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு. சி. மதியழகன் பிரதிக் கல்விப் பணிப்பாளர், (கல்வி முகாமைத்துவம் வலிகாமம் கல்வி வலயம்) அவர்கள் தனது பாடசாலைக் கல்வியை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கற்று யாழ் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு வணிகமானி (சிறப்பு) பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். தனது பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறியினையும் யாழ் பல்கலைக் கழகத்தில் கற்று, சிறப்பான தேர்ச்சியினைப் பெற்றுத் தன்னை தொழிலில் உயர்த்திக் கொண்டார். தேசிய கல்வி நிறுவகத்தில் முதுகல்விமாணியைக் கற்று, தனது தொழில் வாண்மையை வளர்த்துக் கொண்டார்.

யா/ நாவற்குழி மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்து மாணவர்களிற்கு சிறந்த ஆசானாக

தொழிற்பட்டார். அரசாங்கத்தினால் நடாத்தப்படும் இலங்கை கல்வி நிர்வாகச் சேவைப் (SLEAS) பரீட்சையில் சித்தியடைந்து தனது கல்வி நிர்வாக சேவையினை பண்டாரவளை கல்வி வலயத்தில் ஏற்றுக் கொண்டு, 19.08.2018 வரை கடமையாற்றினார். 20.08.2018ம் திகதியில் இருந்து எமது கல்வி வலயத்தில் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையை பொறுப்பேற்று, கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சியடைவதற்கு சேவையாற்றி வருகின்றார். இவரிடம் எமது பாடசாலையின் தேவைகள் பற்றி அணுகுகின்ற போது எமக்கு தேவைப்படும் ஆலோசனைகளை வழங்கி பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவி செய்து வருகின்றார். இன்று எமது பரிசளிப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்து கொண்டு இருப்பது எம்மை மகிழ்விக்கின்றது.

இன்றைய இந்நிகழ்வில் கௌரவவிருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி. மணிமேகலை ரவீந்திரன் அவர்கள், எமது பாடசாலையில் 1964 – 1976 வரை கல்வி கற்றார். அக்காலத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகள் மட்டும் எமது பாடசாலையில் இருந்ததன் காரணமாக கலைப்பிரிவில் நாட்டம் கொண்டு க. பொ. த உயர்தரத்தை வேறு பாடசாலையில் கற்று பல்கலைக் கழகம் சென்றார். பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டிலும் சிறந்த வீராங்கனையாக விளங்கினார். தனது ஆசிரிய சேவையை வெளிமாவட்டத்திலே மேற் கொண்டு தான் கல்வி கற்ற பாடசலையில் ஆசிரியராக சேவையைத் தொடர்ந்தார். அதன் பின்னர் ஆசியரியராக வேறு பாடசாலைகளில் கடமையாற்ற தனது ஓய்வு காலத்தை தான் கற்ற பாடசாலையில் நிறைவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இங்கு கடமையாற்றி 25.03.2019 அன்று ஓய்வு பெற்றார். அவர் இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு கௌரவ விருந்தினராக கலந்து கொள்வது எமக்கு ஆனந்தமாக உள்ளது இவர்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

**“நேர்மை நெறி நில்”** என்ற எமது பாடசாலை மகுட வாசகத்திற்கு இணங்க எமது மாணவர்களின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை உங்கள் முன் அறிக்கையாக முன் வைப்பதில் மனமகிழ்வடைகின்றேன்.

## 1. மாணவச் செல்வங்கள்

எமது பாடசாலையானது 1500 இற்கு மேற்பட்ட மாணவர்களுடனும் 60 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களுடனும் இயங்கிக் கொண்டிருக்கும் போது 1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இடம் பெயர்ந்து சென்ற பின்பு 2016 ஜுன் மாதம் 2ம் திகதியிலிருந்து மீள்குடியேறி வினைத்திறனுடன் இயங்கி வருகின்றது. இதனால் ஆண்டு தோறும் எமது பாடசாலை நோக்கி மாணவர்களின் வருகையானது அதிகரித்து செல்கின்றது.

### மாணவர் தொகை – 2019

| தரம் | ஆண் | பெண் | தொகை |
|---|---|---|---|
| 06 | 06 | 08 | 14 |
| 07 | 11 | 14 | 25 |
| 08 | 09 | 14 | 23 |
| 09 | 09 | 15 | 24 |
| 10 | 14 | 06 | 20 |
| 11 | 11 | 15 | 26 |
| 11R | 03 | 07 | 10 |
| 12 | 02 | 06 | 08 |
| 13 | 03 | 07 | 10 |

எமது மாணவர்களின் பெற்றோர்களில் அதிகமானவர்கள் நிரந்தர தொழில் அற்றவர்கள், பொருளாதார வலுவற்றவர்கள், பல வருடமாக இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் வசித்து வந்தவர்கள். இவர்கள் வாழ்வில் பெருங் காலம் முகாம் வாழ்க்கை நடாத்தியவர்கள். இருந்த போதிலும், தங்கள் பிள்ளைகளிற்கு கல்வியை வழங்குவதிலும் அவர்களை வாழ்க்கையில் உயர்த்தி விடுவதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள். அவர்கள் இவ்வாறு ஆர்வத்துடன் இருப்பது எம்மை உற்சாகமடையச் செய்கின்றது.

## உயர்விற்காக உன்னதமாக உழைக்கும் ஆசிரியர்கள்

"மாணவர்களின் உயர்ச்சியே தம் வளர்ச்சி" என்ற சிந்தனையுடன் எந்நேரமும் செயற்பட்டுக்கொண்டு இருக்கும் ஆசிரியர் குழாத்தை எனது கல்லூரி கொண்டிருப்பதனால் நான் பெருமையடைகின்றேன். இவர்களின் செயற்பாட்டின் வினைத்திறன் விளைவாக எமது கல்லூரியின் பெறுபேறுகள், இணை பாட விதான செயற்பாடுகளின் அடைவு மட்டம் முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

முகாமைத்துவ அலுவலகர்கள் எவரும் இன்றி, அவர்களின் கடமைகளை தங்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிற்கு மேலதிகமாக வழங்கி வருகின்றனர். மேலதிக கடமையை வழங்கிவரும் பிரதி அதிபர் திரு. செ. பிரகாஸ் மற்றும் சகல ஆசிரியர்களின் சேவை உயர்வானது. இவர்கள் அனைவரும் எனது பாராட்டுக்குரியவர்கள்.

## துரதிஸ்டமாக எம்மைவிட்டுப் பிரிந்து முன்நாள் அதிபர்கள்

"எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு துணைபுரிந்த அமரர் பொ. அமிர்தலிங்கம் மற்றும் அமரர்.வி.சச்சிதானந்தன்" ஆகியோரரது மறைவு எமது பாடசாலைக்கு பெரும் இழப்பாகும். இந் நேரத்தில் அவர்களின் சேவையினை நினைவில் நிறுத்திக் கொள்கின்றேன்.

## புதிதாக இணைந்த ஆசிரியர்கள்

எமது கல்லூரியின் ஆசிரியர் குழாமுடன் இடம் மாற்றம் பெற்றும் புதிய நியமனத்தின் அடிப்படையிலும் பின்வருவோர் இணைந்து கொண்டார்கள்.

1. திரு. அ. ஜெயந்தன் (2நாட்கள்)
2. திருமதி ச. பரமசிவம்
3. செல்வி. இ. ஜீன் பிரவீனா
4. திருமதி. ப. உமாவாகீசர்
5. செல்வி. செ. சசிமாலா
6. திரு. சோ. பிரசாந்தன்
7. செல்வி. இ. அனுசா
8. திருமதி. ப. பாலகிருஸ்ணா

9. திருமதி. அ. ஜெயசீலன்
10. திரு. இ. விஜெ
11. செல்வி. சா. சிவப்பிரகாசம் (2நாட்கள்)
12. திருமதி. சி. ரதீஸ்குமார்
13. திரு. கு. கிரிசாந்

எமது பாடசாலையில் களநிலைக்கேற்ப தமது பணியை சிறப்பாக வழங்க முன் வந்துள்ளனர் இவர்களை மனமகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

**இடம் மாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்**

எமது பாடசாலையில் தங்களின் சேவையினை வழங்கி தமது சொந்த தேவை காரணமாக இடம் மாற்றம் பெற்றுச் சென்ற

1. திருமதி. பி. பிரதாபன்
2. திருமதி. க. சீவரட்ணம்

அவர்கள் கல்லூரியில் ஆற்றிய சேவையினை பாராட்டுகின்றேன். இவர்களின் இடம் மாற்றம் கல்லூரிக்கு கவலை அளிக்கின்றது. ஆயினும் அவர்கள் சென்ற இடத்தில் மிகச் சிறந்த முறையில் செயற்பட வாழ்த்துகின்றேன்.

**வாண்மை விருத்தியில் ஆசிரியர்கள்**

எமது பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும் போது தமது ஆசிரிய தொழில் வாண்மை விருத்தி பெறும் நோக்கில் திருமதி ப.சுதாகரன் யாழ் பல்கலை கழகத்தில் பட்டபின் டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொண்டு வருகின்றார். அத்துடன் எமது பிரதிஅதிபர் திரு செ. பிரகாஸ் தேசிய கல்வி நிறுவகத்தில் M.Ed கற்கை நெறியினை கற்று வருகின்றார். இவர்கள் தங்களது பாடநெறியில சிறப்பான தேர்ச்சியினை பெற வாழ்த்து கின்றேன்.

**பட்டம் பெற்ற ஆசிரியர்கள்**

கல்லூரியில் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பணிகளுடன் தமது தொழில் வாண்மையையும் வளர்த்தெடுத்து செல்கின்றனர். அந்த வகையில் பின்வருவோர்

1. திரு செ. பிரகாஸ் B.Ed
2. திரு. சு. பகீரதன் B.Ed
3. திருமதி. ஜெ. சந்திரகுமாரன் B.Ed
4. திருமதி. சு கிருஸ்ணா B.Ed
5. செல்வி. இ. ஜீன் பிரவீனா B.Ed
6. திருமதி. ம. கீரத்திகா B.Sc

மேலும் பல பட்டங்கள் பெற்று தொழில் வாண்மையில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றேன்.

**இல்லற வாழ்வில் புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்கள்**

இல்லற வாழ்வில் இணைந்த திருமதி கீ. மதிரூபன் ஆசிரியரின் வாழ்வு வளம் பெற வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**ஓய்வு பெற்றுச்சென்ற ஆசிரியர்கள்**

**திருமதி. யமுனா பாஸ்கரன்**

எமது பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியாராக கடமையாற்றி, மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதிலும், மாணவர்களை நன் மாணவர்களாக வழிப்படுத்துவதிலும் சிறந்து விளங்கியதோடு பாடசாலையின் சகல செயற்பாடுகளுக்கும் தன்னாலான ஒத்துழைப்பை வழங்கினார்.

**திருமதி. செ. செல்வராஜா**

எமது பாடசாலையில் 27 வருடங்களாக சமூக விஞ்ஞான பாடத்தை கற்பித்ததுடன், பாடசாலையின் நிர்வாகப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். பாடசாலை பல சந்தர்ப்பங்களில் இடம்பெயர்ந்து சென்ற போதும் பாடசாலையுடன் கூடவே சென்று பாடசாலை மூடப்படாது காப்பாற்றினார். பாடசாலையில் அதிபர் இல்லாத சந்தர்ப்பங்களில் பதில் அதிபராக கடமையாற்றினார். பாடசாலை மீளவும் தனது சொந்த இடத்திலே இயங்குவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவர் ஆவார். இவரின் உன்னதமான சேவையினால் தான் பாடசாலை இன்று இந் நிலைக்கு உயர்ந்து வந்துள்ளது.

**செல்வி. முருகேசு சுசீலாராணி**

எமது பாடசாலையில் மனைப்பொருளியல் பாட ஆசிரியராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இவர் எமது பாடசாலையின் தனது பாடத்துறையில் மாணவர்களின் உயர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டார். இவரால் பயிற்றப்பட்ட மாணவர்கள் கோட்ட மட்ட, வலய மட்ட மனைப்பொருளியல் போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி, பாடசாலைக்கு பெருமை சேர்த்தார்கள். பாடசாலையில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் விருந்து உபசாரத்தை முழுமையாக பொறுப்பேற்று சிறப்பாக செயற்படுத்தி அனைவரையும் மகிழ்வித்தார்.

**திருமதி. மணிமேகலை இரவீந்திரன்**

எமது பாடசாலையின் பகுதித்தலைவராக கடமையாற்றி பாடசாலை முன்னேற்றமடைவதற்கு உதவி புரிந்தார். கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கு உத்திகளை மேற்கொண்டார். மாணவர்களின் தமிழ்மொழி பாடவளர்ச்சியில் பெரும்பங்காற்றி தன் முழுமையான சேவையினை இப் பாடசாலைக்கு வழங்கினார். தான் சார்ந்த பாடசாலையில் கடமையாற்றி பின்பு பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் ஒரு சில வருடங்கள் புதுமடம் றோ. க. த. க. பாடசாலையில் அதிபராகவும் கடமையாற்றி தனது சேவையின் இறுதிக் காலத்தை தான் சார்ந்த பாடசாலையிலே நிறைவு செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை, ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் நிறைவேற்றி உள்ளார். இப்பாக்கியம் அனைவருக்கும் கிடைக்காத ஒன்று. இவ்வாசிரியருக்கு கிடைத்தமை பெரும் புண்ணியம் ஆகும்.

இவர்களின் ஓய்வு பெரும் இழப்பாக கருதுகின்றோம். அதே நேரத்தில் எந்நேரமும் தங்களின் ஆலோசனைகளையும், ஆதரவையும் தருவது மனநிறைவை தருகின்றது. இவர்களது ஓய்வுகாலம் மிகச்சிறந்த முறையில் அமைந்து நீண்டகாலம் வாழ்ந்திட ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அருளை வேண்டி நிற்கின்றேன்.

**பாடசாலை முகாமைத்துவ குழு**

1. திரு. கு. விமலன் (அதிபர்)
2. திரு. செ. பிரகாஸ் (பிரதி அதிபர்)
3. திருமதி. உ.சிவகுமார்
4. திருமதி ஜெ. சந்திரகுமாரன்
5. திரு. ஏ. ஸ்ரீரங்கன
6. திரு. சு. பகீரதன்
7. திருமதி. வி. ஜெகதீஸ்வரன்
8. திருமதி. ப. உமாவாகீசர்
9. திருமதி. பு. திரவியற்செல்வம்
10. திருமதி. சு கிருஸ்ணா
11. திருமதி ச. பரமசிவம்

மீள் குடியேறிய பின்பு பாடசாலை திறம்பட செயற்படுவதற்கு முகாமைத்துவ குழாமின் பங்கு பெரிதும் துணை நிற்கின்றது.

**பாடசாலை அபிவிருத்திக் குழு (SDC)**

பாடசாலை அபிவிருத்திக் குழுவானது பாடசாலையின் அபிவிருத்தித் திட்டங்கள் மாணவர்களின் கல்வி இணைபாடவிதான செயற்பாடுகள் போன்ற பல விடயங்களில் முக்கிய தீர்மானம் எடுத்து, செயற்படுத்த துணை புரிகின்றது. பாடசாலையில் நடைபெறும் சகல செயற்பாடுகளிலும் தங்களது முழுமையான பங்களிப்பினை வழங்கி வருகின்றார்கள்.

1 தலைவர் :- திரு. கு. விமலன் (அதிபர்)
2. உபதலைவர் :- திரு. செ. பிரகாஸ்(பிரதி அதிபர்)
3. செயலாளர் :- திரு. மு. இன்பராசா(பெற்றோர்)
4. பொருளாளர் :- திருமதி. உ. சிவகுமார் (ஆசிரியர்)

**ஆசிரியர்கள்**

1. திருமதி. ஜெ. சந்திரகுமாரன்
2. திரு. ஏ. சிறிறங்கன்
3. திருமதி. கா. பார்த்தீபன்
4. திருமதி. ப. உமாவாகீசர்

**பெற்றோர்கள்**

1. திரு. வேலன் சிவசுப்பிரமணியம்
2. திருமதி பிறேமவதனா கணேசலிங்கம்
3. திருமதி ஜெயலட்சுமி சுரேந்திரன்
4. திருமதி இந்துசுமங்கலி இந்திரதீசன்

**பழைய மாணவர்கள்**

1. திரு. இ. புஸ்பராசா
2. திரு. இ. மனோகரன்

**பாடசாலை ஒழுக்காற்றுக் குழு**

ஒரு பாடசாலையானது, மாணவர்களது கல்வியில் மட்டுமன்றி மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களிலும் செல்வாக்குச் செலுத்தி சிறந்த பிரஜையாக சமூகத்திடம் அவனை ஒப்படைக்கின்றது. அந்த வகையில், எமது ஒழுக்காற்றுக் குழுவானது சிறப்பாக செயற்படுவதுடன், மாணவ முதல்வர்களும் அவர்களுக்கு உதவிகள் புரிகின்றனர்.

1. திரு. கு. விமலன் (அதிபர்)
2. திரு. செ. பிரகாஸ் (பிரதிஅதிபர்)
3. திருமதி. ஜெ. சந்திரகுமாரன்
4. திருமதி. கா. பார்த்தீபன்
5. திரு. ஏ. ஸ்ரீரங்கன்
6. திரு. அ. ஜெயந்தன்

**பழைய மாணவர் சங்கம்**

1. தலைவர் :- திரு. கு. விமலன்
2. உபதலைவர் :- திரு. சி.மனோகரன்
3. செயலாளர் :- திரு. மா. நாகேந்திரசீலன்
4. உபசெயலாளர் :- திரு.செ. கமலநாதன்
5. பொருளாளர் :- திரு.சி. புஸ்பராசா

**நிர்வாக உறுப்பினர்கள்**

1. திரு. நா. பிரதீபன்
2. திரு.ஆ. ஜெயதாஸன்
3. திரு. க. கலியுகவரதன்
4. திருமதி. இ. ஜெகசோதி
5. திருமதி. ச. ரஜனி

6. திருமதி. ப. ஜெயசித்ரா
7. திரு .ச. குலசேகரம்
8. திரு. செ. செல்வராசா
9. திரு. சி. இன்பராசா
10. திரு. இ. விஜெ

ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் பழைய மாணவர்களின் பங்கு அளப்பரியது. எமது பாடசாலையில் 30 வருடங்களாக தடைகள் வளப்பற்றாக்குறை இடப்பெயர்வு என பல இன்னல்களை சந்தித்து வந்துள்ளது. துன்பம் ஏற்படும் போது நாம் கைகொடுப்போம் என்பதற்கு இணங்க பழைய மாணவர்கள் பலர் தனிப்பட்ட ரீதியாகவும் சங்கரீதியாகவும் எமது தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

**எமது பழைய மாணவர் சங்கம்** பாடசாலை சகல நிகழ்வுகளிலும் தமது உடல் உழைப்பை வழங்குவதோடு பாடசாலைக்கு தேவையான வளங்கள் பெற்று கொடுத்து வருகின்றார்கள். அத்துடன் பாடசாலை நிகழ்வுகளிற்கு தங்கள் நிதிப்பங்களிப்பினை செய்து எம்மை ஊக்குவிக்கின்றனர். பாடசாலை முன்னைய நிலமையை அடைவதற்கான சிறந்த ஆலோசனைகளையும் அவ்வப்போது வழங்கி வருகின்றனர்.

**கொழும்பு பழைய மாணவர் சங்கம்**

எமது பாடசாலையுடன் அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்தி பாடசாலை தேவைகள் மாணவர்களிற்கான தேவைகள் பற்றி கதைத்து எங்களை ஊக்கப்படுத்துகின்றனர். மாணவர்களிற்கான மதிய உணவு, பாடசாலை Band அணியினரிற்கான சீருடை மற்றும் பல தேவைகளை நிறைவேற்றித் தந்துள்ளனர்.

**லண்டன் பழைய மாணவர் சங்கம்**

இங்கு இயங்கும் சர்வதேச நடேஸ்வரன் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக பாடசாலையில் நடைபெறும் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி, பரிசளிப்பு விழா , மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பாடசாலையின் 7ம் திருவிழா, மாணவர்களின் போக்குவரத்திற்கான பருவகால சீட்டுக்கான பண உதவி, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களிற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வளவாளர் கொடுப்பனவு போன்றவற்றுடன் அவ்வப்போது எமது

கோரிக்கைக்கான கொடுப்பனவுகளையும் செய்து வருகின்றனர் இவர்களின் சேவை எமக்கு மனநிறைவை தருகின்றது.

**கனடா பழைய மாணவர் சங்கம்**

எமது பாடசாலையின் பல்வேறுபட்ட தேவைகளை கனடா பழைய மாணவர் சங்கம் நிறைவேற்றி வருகின்றது. பாடசாலையின் ஆலயத்தினை புனருத்தாரனம் செய்து கும்பாபிஷேகம் நடாத்தியமை, பரிசளிப்பு விழாவிற்கான உதவி, புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளிகளிற்கு அண்மையாக புள்ளிகளை பெற்ற மாணவர்களிற்கான விசேட கொடுப்பனவு மற்றும் அலுவலகத்திற்கான உபகரணங்கள் மற்றும் தேவைகள் சம்பந்தமாக கோரிக்கை விடுகின்றபோது நிறைவேற்றி வருகின்றார்கள். இவர்களின் சேவை எமக்கு மனநிறைவை தருகின்றது.

## க.பொ.த. சாதாரண பரீட்சை

**2017 க.பொ.த. சாதாரண தரம்**

எமது பாடசாலையில் 2017ம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் செல்வி **இ. மதிஸ்ரா 8 A, B** சித்தி பெற்று, பாடசாலைக்கு பெருமை சேர்த்தார். இம் மாணவி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று தொடர்ந்து எமது கல்லூரியில் கல்விகற்று க. பொ. த (சா. த) பரீட்சையில் இப் பெறுபேற்றை பெற்றுள்ளார். இவருக்கு எமது பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். 2017ம் ஆண்டு க.பொ.த(சா/த) தரப்பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

**2017 இல் க. பொ.த( சா.த) தரப் பெறுபேறுகள்**

| மாணவர் பெயர் | A | B | C | S | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| இன்பராசா மதிஸ்ரா | 8 | 1 | | | 8A, B |
| கந்தசாமி விந்துஜா | 1 | 2 | 3 | 1 | A, 2B, 3C, S |
| கணேசலிங்கம் டினோஜன் | 1 | 3 | 4 | | A, 3B, 4C |
| சசிக்குமார் சசிப்பிரியன் | | 2 | 3 | 3 | 2B, 3C, 3S |
| சிவகுமார் சஜிந்தன் | | 1 | 3 | 3 | B, 3C, 3S |
| தனராசா தமிழ்ச்செல்வி | | 1 | 2 | 3 | B, 2C, 3S |
| செல்வம் நிரோஜினி | | | 3 | 3 | 3C, 3S |

## 2018 இல் க. பொ.த(சா.த) தரப் பெறுபேறுகள்

**2018** ஆம் ஆண்டு க. பொ. த சாதாரண தரத்தில் பாடசாலை வரலாற்றில் முதன்முதலாக சகல பாடங்களிலும் **A** தர சித்தி பெறப்பட்டது.

**செல்வன் இ. கிருஸ்ணராஜ்** எனும் மாணவன் **9A** தரச்சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவருக்கு பாடசாலை சமூகம் சார்பாகவும், எனது சார்பாகவும் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கின்றேன். மாணவனை வழிப்படுத்திய எனது பாடசாலை சகல ஆசிரியர்களுக்கும் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். 2018ம் ஆண்டு க.பொ.த(சா/த) தரப்பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

## 2018 இல் க. பொ.த( சா.த) தரப் பெறுபேறுகள்

| மாணவர் பெயர் | A | B | C | S | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| இன்பராசா கிருஷ்ணராஜ் | 9 | | | | 9A |
| இந்திரதீசன் கேசனா | 2 | 3 | 2 | 2 | 2A, 3B, 2C, S |
| ஸ்ரீஸ்கந்தராசா கவிப்பிரியா | 1 | 1 | 5 | 1 | A, B, 5C S |
| ரகுநாதன் பவிக்கா | | 1 | 5 | 1 | B, 5C, S |
| தங்கவடிவேலு சஞ்சீவன் | | | 3 | 3 | 3C, 3S |

### க. பொ. த சாதாரண பாடங்களின் சித்தி வீதம்

| இல | பாடம் | 2017 | 2018 |
|---|---|---|---|
| 1. | சைவநெறி | 73% | 50% |
| 2. | கத்தோலிக்கம் | 100% | 67% |
| 3. | தமிழ்மொழியும் இலக்கியமும் | 67% | 87% |
| 4. | ஆங்கிலம் | 7% | 20% |
| 5. | கணிதம் | 33% | 33% |
| 6. | வரலாறு | 53% | 40% |
| 7. | விஞ்ஞானம் | 20% | 20% |
| 8. | குடியுரிமைக் கல்வி | 53% | 47% |
| 9. | கர்நாடக சங்கீதம் | 100% | 80% |
| 10. | சித்திரம் | 100% | 88% |
| 11. | நாடகம் | - | 100% |
| 12. | மனைப் பொருளியயல் | 83% | 71% |
| 13. | சுகாதாரமும் உடற்கல்வியும் | 56% | 75% |

### க. பொ. த உயர்தரம்

எமது பாடசாலையில் 1990 ஆம் ஆண்டின் பின் க. பொ. த உயர்தர கலைப்பிரிவு 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வருடம் 08 மாணவர்கள் கற்றலில் ஈடுபடுகின்றார்கள். ஒரு சில பாடங்களிற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனைக் கனடா பழைய மாணவர்கள் சங்கம், லண்டன் பழைய மாணவர்கள் சங்கம் ஆசிரியர்களிற்கான உதவிகளை புரிந்து வருகின்றார்கள்.

2019ம் ஆம் ஆண்டு எமது பாடசாலையில் 10 மாணவர்கள் க. பொ. த உயர்தரம் கற்றலில் ஈடுபடுகின்றார்கள். இவ்வருடம் அயற்பாடசாலைகளில் இருந்து உயர்தரம் கற்பதற்கு எமது பாடசாலை நோக்கி மாணவர்கள் வருகை தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2018 ஆம் ஆண்டு க.பொ. த உயர்தரம் கற்கின்ற மாணவர்கள் கல்வி ஊக்கத்திற்காக கனடாவில் வசிக்கும் பழைய மாணவன் திரு. த. தவராஜசிங்கம் ஒவ்வொரு மாதமும் 2000/= வீதம் 7 மாணவர்களிற்கு வழங்கி வருகின்றார்.

திருமதி. புஸ்பராணி விக்கிரமசிங்கம் ஒரு மாணவிக்கு மாதாந்தம் 3000/= வீதம் வழங்கி வருகின்றார். மேலும் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு பழைய மாணவர் மாணவி ஒருவரது வங்கிக் கணக்கில் மாதாந்தம் 2000/= வைப்புச்செய்து வருகின்றார். இதனால் மாணவர்கள் ஊக்கத்துடன் கல்வி கற்கின்றார்கள். இவ்விடத்தில் அந்த நல்ல உள்ளங்களிற்கு எனது பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்

2019ஆம் ஆண்டு க. பொ.த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு இவ்வாறான உதவியை நாம் எதிர்பார்க்கின்றோம்.

**இணைபாட விதான செயற்பாடுகள்**

எமது கல்லூரியின் மாணவர்கள் இணைபாட விதான செயற்பாடுகளில் தம்மை ஆர்வத்துடன் ஈடுபடுத்தி தங்களின் ஆற்றலையும் ஆளுமைகளையும் வளர்த்துக் கொள்கின்றார்கள்.

**தமிழ்மொழித்தினப் போட்டி**

தமிழ்மொழித்தினப் போட்டிகளிற்காக மாணவர்களை பயிற்றுவித்து வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதில் தமிழ் தினக் குழு சிறப்பாக செயற்பட்டு வருகின்றது.

- **தமிழ் மன்றம்**
  - பொறுப்பாசிரியர்:- திருமதி பவானி உமா வாகீசர்
  - தலைவர் :- செல்வி இ. மதிஸ்ரா
  - செயலாளர் :- செல்வி. ஞா. சத்தியா
  - பொருளாளர் :- செல்வி. செ.டக்சிகா
  - உறுப்பினர்கள் :-
    - தரம் 6 - இ. கிருஸ்டியா
    - தரம் 7 - இ. கேசவன்
    - தரம் 8 - மு. சரணியா
    - தரம் 9 - ஞா. சாருஜா
    - தரம் 10- யு. யுவிஸ்ரன்
    - தரம் 11- வி.டிலானி

**போட்டி முடிவுகள்**

- செல்வி. க. ஜனனி - கவிதைப் போட்டி (அகில இலங்கை இந்துமா மன்றம்) - 3ஆம் இடம்
- செல்வி. இ. கேசனா - கவிதையாக்கம் (கோட்ட மட்டம்) 2ஆம் இடம்
- செல்வி. அ. றெம்சியா - பாவோதல் (கோட்ட மட்டம்) 3ஆம் இடம், வாசிப்பு (கோட்ட மட்டம்) 3ஆம் இடம
- செல்வி. ஸ்ரீ. கஸ்தூரி - பேச்சு (கோட்ட மட்டம்) 2ஆம் இடம்
- செல்வி. மு. சாணுகா - பாவோதல் (கோட்ட மட்டம்) 3ஆம் இடம்
- செல்வன். யு. யுவிஸ்ரன் - தனி இசை (கோட்ட மட்டம்) 2ஆம் இடம்
- செல்வி. ஞா. சத்தியா - சிறுகதை ஆக்கம்
  கோட்ட மட்டம் - 1ஆம் இடம், வலய மட்டம் - 3ஆம் இடம்

**கணித விஞ்ஞான போட்டிகள்**

இப்போட்டிகளிற்கு மாணவர்களை நெறிப்படுத்தி வரும் திருமதி ஜெ. சந்திரகுமாரன், திரு சு. பகீரதன், திருமதி கீ. மதிரூபன், திருமதி. சு. கிருஸ்ணா ஆகியோர் சிறப்பாக செயற்படுகின்றார்கள். இவர்களை பாராட்டுகின்றேன்.

➢ **கணித விஞ்ஞான மன்றம்**

- பொறுப்பாசிரியர்:- திருமதி. ஜெ. சந்திரகுமாரன்
- தலைவர் :- செல்வன் . அ.அன்ரனி சியானுசன்
- செயலாளர் :- செல்வி. வி.டிலானி
- பொருளாளர் :- செல்வி. சே.நிரோஜினி
- உறுப்பினர்கள் :-
  - தரம் 6 – செ. சஞ்சய்
  - தரம் 7 – சு. சுகன்தா
  - தரம் 8 – ர. ரதீஸ்குமார்
  - தரம் 9 – மேரிலிசா
  - தரம் 10- ஜெ. ஜெசிந்தன்

தரம் - 6 மாணவி த. பிரசாந்தினி மாகாணமட்ட ஒலிம்பியாட் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு எமது பாராட்டுக்கள்.

**ஆங்கில தினப்போட்டிகள்**

ஆங்கில தினப்போட்டிகளில் பல மாணவர்கள் பங்குபற்றி பல வெற்றிகளைப் பெற்று வருகின்றனர். இம்மாணவர்களை வழிப்படுத்தி வரும் திருமதி. உமா சிவகுமார், செல்வி. இ. ஜீன் பிரவீனா ஆகியோரையும் மாணவர்களையும் பாராட்டுகின்றேன்

- **ஆங்கில மன்றம்**
    - பொறுப்பாசிரியர்:- திருமதி உமா சிவகுமார்
    - தலைவர் :- செல்வி இ. மதிஸ்ரா
    - செயலாளர் :- செல்வி. வி. வானுப்பிரியா
    - பொருளாளர் :- செல்வி. சு. சுஜிந்தன்
    - உறுப்பினர்கள் :-
        - தரம் 6 – அ. இசைநிலா
        - தரம் 7 – ஜீ. அன்ரனி டினுஜன்
        - தரம் 8 – சி. வேணுசா
        - தரம் 9 – அ.றெம்சியா
        - தரம் 10 – ச. கஸ்தூரி
        - தரம் 11– அ.அஜந்தா

**போட்டி முடிவுகள்**

- செல்வி. இ. மதிஸ்ரா
  Dictation (கோட்ட மட்டம்) – 3ஆம் இடம்
  Speech (கோட்ட மட்டம்) - 2ஆம் இடம்

**சமூக விஞ்ஞான போட்டி**

சமூக விஞ்ஞான போட்டியில் பல மாணவர்கள் கோட்டம், வலயம் மாகாண மட்டம் போட்டிகளில் வெற்றியீட்டி வருகின்றார்கள். இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களான திரு சோ.பிரசாந்தன, செல்வி இ. அனுசா திரு ஏ. ஸ்ரீரங்கன் ஆசிரியர்கள் பாராட்டிற்குரியவர்கள்.

**சமூக விஞ்ஞான போட்டி**

- செல்வன். இ. கிருஷ்ணராஜ்
  வலய மட்டம் - 2ஆம் இடம்
  மாகாணமட்டம் - 3ஆம் இடம்

**மாணவர் பாராளுமன்றம்**

எமது பாடசாலையில் மாணவர் பாராளுமன்றம் சிறப்பாக செயற்படுகின்றது. பின்வருவோர் மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகளாக செயற்படுகின்றார்கள்.

1. சபாநாயகர் :- செல்வன். இ.கிருஸ்ணராஜ்
2. பிரதமர்:- செல்வி வி.டிலானி
3. சபை முதல்வர் :- செல்வி அ. அஜந்தா
4. பிரதி சபாநாயகர் :- செல்வன் சு.சுஜிந்தன்
5. பிரதி செயற்குழு தலைவர்:- செல்வி ஸ்ரீ. கவிப்பிரியா

**இந்து மாமன்றம்**

பாடசாலையில் நடைபெறும் ஆலயத்தின் அனைத்து செயற்பாடு களையும் மிகச்சிறப்பாக செயற்படுத்துகின்றனர். தைப்பொங்கல் விழா, ஆடிப்பிறப்பு, நவராத்திரி விழா, கும்பாபிஷேக தினம் போன்ற சகல செயற்பாடுகளையும் முழுமையாக நிறைவேற்றுகின்றனர். அத்துடன் நவராத்திரியின் போது மாணவர்களிடையே கோலப்போட்டி, தோரணப் போட்டி, பேச்சுப் போட்டி போன்றவற்றை சிறப்பாக நடாத்தி பரிசில்களை வழங்குகின்றது. அத்துடன் நாயன்மார்களின் குருபூசை தினத்தையும் வெகு சிறப்பாக கொண்டாடுகின்றது. இதற்கு பொறுப்பாக செயற்படும் செல்வி க. இராஜேஸ்வரி, திருமதி. ச.பரமசிவம், திருமதி.வி. ஜெகதீஸ்வரன். திருமதி பு. திரவியச்செல்வம், செல்வி. செ. சசிமாலா ஆகியோருக்கு எனது பாராட்டுக்கள்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**

1. தலைவர் :- திருமதி. உ. சிவகுமார்
2. செயலாளர் :- செல்வி. செ. சசிமாலா
3. பொருளாளர் :- திருமதி. ச. பரமசிவம்
4. உபதலைவர் :- திரு. சோ. பிரசாந்தன்
5. உபசெயலாளர் :- திருமதி. அ. நிகாந்தன்

**நிர்வாக உறுப்பினர்கள்**

1. திரு. ஏ. ஸ்ரீரங்கன்
2. திரு. சு. பகீரதன்
3. திரு. அ. ஜெயந்தன்
4. திருமதி. வி. ஜெகதீஸ்வரன்
5. செல்வி. இ. ஜீன் பிரவீனா
6. செல்வி. இ. அனுசா

இக்கழகத்தினால் இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர் களுக்கும், ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கும் உரிய காலத்தில் கௌரவிப்புக்களைச் செய்கின்றனர். அத்துடன் ஆசிரியர்களின் குடும்ப நிகழ்வுகளில் முழுமையான பங்களிப்பை வழங்குகின்றனர்.

**விளையாட்டுத் துறை**

எமது பாடசாலையில் இல்ல மெய்வல்லுநர் போட்டியானது அசாதாரண சூழ்நிலை காரணமாக 2018 ஆம் ஆண்டு எமது பாடசாலையிலுள்ள சிறிய மைதானத்தில் நடாத்தப்பட்டது.

- பிரதமவிருந்தினர் - திரு. சி. இந்திரகுமார் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்,முகாமைத்துவம்,வலிகாமம் கல்விவலயம்)
- சிறப்புவிருந்தினர் - திரு. மா. ஆனந்தகுமார் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விஅலுவலகம், தெல்லிப்பளை)
- கௌரவவிருந்தினர் - திரு. செ. மகிந்தன் (பிரதிஅதிபர், யா/கொக்குவில் இந்துஆரம்ப பாடசாலை) (பழைய மாணவன்)

2019 ஆம் ஆண்டு எமது பாடசாலையின் சொந்த மைதானத்தில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றமை சிறப்பிற்குரிய நிகழ்வாகும்.

- பிரதமவிருந்தினர் - திரு. க. முரளிதரன் (மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)

- சிறப்புவிருந்தினர் - திரு. சோ. சுகிர்தன் (தவிசாளர், வலிவடக்கு பிரதேச சபை)

➢ கௌரவவிருந்தினர் - திரு. க. ஆதித்தன் (ஆசிரிய ஆலோசகர், கணிதம்)

- திரு. ந. ரவீந்திரன் (கிராம அலுவலர் J/235, பழைய மாணவர்)

இல்ல மெய்வல்லுநர் போட்டியானது லண்டன் பழையமாணவர் சங்கத்தின் அனுசரனையுடனும் உள்ளூரில் உள்ள பழையமாணவர்களின் பங்களிப்புடனும் சிறப்பாக நடைபெற்றது. எமது மாணவர்கள் கோட்ட மட்ட மற்றும் வலய மட்ட போட்டிகளில் பங்கு பற்றி தமது திறன்களை வெளிப்படுத்தியும் வருகின்றார்கள்.

**மேலதிக ஆளணி (உதவி செய்யும் மனப்பாங்குடன்)**

எமது பாடசாலையின் கரப்பந்தாட்ட அணியின் பயிற்று விப்பாளராக கடமையாற்றும் திரு.கு.குணதீபன் எந்தவித வேதனமும் இன்றி மாணவர்களுக்கு பயிற்சி வழங்கி வருவதுடன் பாடசாலையின் விளையாட்டுத் துறைக்கு பல்வேறு பங்களிப்புக் களையும் வழங்கி வருகின்றரார். இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளிலும், பாடசாலையில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றார். இவருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மேலைத்தேய வாத்திய அணி**

பாடசாலையில் முதன்முதலாக மேலைத்தேய வாத்திய அணி 2019ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவற்றிற்கான சீருடைகள் பழையமாணவர்களின் அன்பளிப்புக்கள் மூலம் பெறப்பட்டது. இதற்கான Base Drum பழையமாணவர் திரு. மு. கனகநாயகம் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பொறுப்பாசிரியர்கள்

1. செல்வி. இ. ஜீன் பிரவீனா
2. திருமதி. வி. ஜெகதீஸ்வரன்
3. திரு. அ. ஜெயந்தன்

- பாடசாலையில் புதிதாக உருவாக்கப்பட்ட Band வாத்திய அணிக்குரிய சீருடைக்கான பணத்தினை பின்வரும் பழைய மாணவர்கள் வழங்கினார்கள்.

1. திரு. யோக்கியம் சீமோன் 2 ரூ.10000

(பழைய மாணவன், கனடா)

| | | | |
|---|---|---|---|
| 2. | திரு. சற்குணசீலன் (பழைய மாணவர் லண்டன்) | 2 | ரூ.10000 |
| 3. | திரு.இராசேந்திரம் (பழைய மாணவர் கொழும்பு) | 1 | ரூ.5000 |
| 4. | திரு. குலேந்திரன் (முன்னால் G.S) | 1 | ரூ.5000 |
| 5. | திரு. அருமைநாயகம் (பழைய மாணவர் கொழும்பு) | 1 | ரூ.5000 |
| 6. | திரு.பரமநாதன் | 1 | ரூ.5000 |
| 7. | திரு. செ. மகிந்தன் உப அதிபர் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) | 2 | ரூ.9000 |
| 8. | திரு.ப. காண்டீபன் (டென்மார்க்) | 2 | ரூ.10000 |
| 9. | திரு.ஜெ. ரெஜினா (பிரான்ஸ்) | 2 | ரூ.10000 |
| 10. | திரு. எஸ்.சிவமணி (லண்டன்) | 2 | ரூ.10000 |

## 2019 ஆம் ஆண்டிற்கான மாணவத் தலைவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | செல்வன் ச. சசிப்பிரியன் (சிரேஸ்ட மாணவத் தலைவன்) | தரம் 12 |
| 2. | செல்வி. இ. மதிஸ்ரா (சிரேஸ்ட மாணவத்தலைவி) | தரம் 12 |
| 3. | செல்வன். க. டினோஜன் | தரம் 12 |
| 4. | செல்வன் ச. சயிந்தன் | தரம் 12 |
| 5. | செல்வி த . தமிழ்ச்செல்வி | தரம் 12 |
| 6. | செல்வன். இ. தர்சன் | தரம் 11 |
| 7. | செல்வி. க. கோபிகா | தரம் 11 |
| 8. | செல்வி. ப. பிரிதா | தரம் 11 |
| 9. | செல்வி அ. அஜந்தா | தரம் 11 |
| 10. | செல்வி. வி. டிலானி | தரம் 11 |
| 11. | செல்வி. மு. குணாளினி | தரம் 11 |
| 12. | செல்வன் சு. சுஜிந்தன் | தரம் 11 |

13. செல்வன் அன்ரனி சியானுசன் தரம் 11
14. செல்வி. சி .வானுப்பிரியா தரம் 11
15. செல்வி. அ. அனுசா தரம் 11
16. செல்வி மு. சானுகா தரம் 11

**போசகர்** அதிபர் :- திரு. கு. விமலன்
பிரதி அதிபர் :- திரு. செ. பிரகாஸ்

**பொறுப்பாசிரியர்** :- திரு. ஏ. ஸ்ரீரங்கன்
:- திருமதி. உ. சிவகுமார்
:- திருமதி. ப. உமாவாகீசர்

**அங்கத்தவர்கள்** :- திருமதி.. ஜெ. சந்திரகுமாரன்
:- திருமதி. வி. ஜெகதீஸ்வரன்
:- திரு. சு. பகீரதன்

பாடசாலையின் செயற்பாடுகளில் மாணவத் தலைவர்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்கள்.

**எமது மாணவியின் நேபாளம் நோக்கிய பயணம்**

தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பில் சிறுவர்களுக்கான ஆலோசனை வழங்கல் மற்றும் ஆய்வு நிகழ்ச்சித்திட்டம் 2018. 06.25, 26, 27 ஆம் திகதிகளில் நேபாளம் காத்மண்டு நகரில் நடைபெற்றது. சிறுவர்களுக்கான ஆலோசனைக் குழுவின் பிரதிநிதிகளில் ஒருவராக வடமாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு மாணவி எமது பாடசாலையை சேர்ந்த செல்வி இ. மதிஸ்ரா ஆவார்.

**கல்விச் சுற்றுலா**

எமது மாணவர்கள் கற்றல் செயற்பாட்டின் ஓர் அங்கமாக களப் பயணம் ஒன்றை 2018 ஆண்டு மேற்கொண்டார்கள். அனுராதபுரம், திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை 2 நாட்கள் பார்வையிட்டு அனுபவங்களையும் அறிவையும் வளர்த்துக் கொண்டார்கள்.

**முன்னைய கட்டிடம்**

பொலிஸ் பாவனையில் இருந்து கட்டிடம் முழுமையாக விடுவிக்கப்பட்ட போதும் அக்கட்டிடம் பயன்படுத்தப்பட முடியாத சூழ்நிலையில் காணப்படுகின்றது. அக்கட்டிடம் இடித்து அகற்றப்பட வேண்டும். அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அவை இடித்து அகற்றப்படும் போது அதில் எமது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளிற்கென ஒரு 3 மாடி கட்டிடம் அமைக்கப்பட வேண்டும்.

## பாடசாலையின் நடைபெற்ற அபிவிருத்தி வேலைகள்

எமது பாடசாலையானது சகல வளங்களும் இழந்து மீண்டும் சொந்த இடத்திற்கு வந்து துளிர் விட்டுக் கொண்டு இருக்கின்றது. பாடசாலையின் அபிவிருத்திக்கு,

- கனடா பழைய மாணவர் சங்கம்
- லண்டன் பழைய மாணவர் சங்கம்
- எமது பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்)
- உள்நாட்டில் உள்ள பழைய மாணவர்கள்
- புலம் பெயர் தேசத்து பழைய மாணவர்கள்
- கொழும்பு பழைய மாணவர் சங்கம்
- அரசாங்க நிறுவனங்கள்
- அரச சார்பற்ற நிறுவனங்கள்
- பாராளுமன்ற உறுப்பினர்கள்
- பிரதேச சபை உறுப்பினர்கள்
- நலன் விரும்பிகள்
- கல்வித் திணைக்களம்
- வலயக்கல்வி அலுவலகம்

பல்வேறு உதவிகள் புரிந்து வருகின்றார்கள். இவ்விடத்தில் எனது நன்றிகளை அனைவருக்கும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

❖ பாடசாலையின் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் புனருத்தாரனம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது.

❖ 50'*25' கொண்ட மாடிக் கட்டடம் ஒன்று புதிதாக கட்டப்பட்டது.

❖ எமது பாடசாலையின் பழைய மாணவரான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்களின் ஆலோசனைக்கு இணங்க கம்பெரலிய திட்டத்தில்

1. மாணவர்களிற்கான மலசலகூடம் அமைக்கப்பட்டது.
2. பாடசாலையின் விளையாட்டு மைதானத்தின் முன்பக்கம் எல்லைப் படுத்தப்பட்டு மதில் கட்டப்பட்டது.
3. பாடசாலையின் விளையாட்டு மைதானத்தின் பின்பக்கம் எல்லைப் படுத்தப்பட்டு மதில் கட்டப்பட்டது.

- ❖ ஆசிரியர்களுக்கான மலசலகூடம் Unicef மூலம் அமைக்கப்பட்டது.
- ❖ குழாய்க் கிணறு Rotract Club இனால் அமைத்துத் தரப்பட்டது.
- ❖ புகையிரதப் பாதைப் பக்கம் 160 அடி நீளம் கொண்ட மதில் பழைய மாணவன் திரு. சி. துமிலன் அவர்களால் அமைத்து மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட்டதுடன் பாடசாலையும் எல்லைப் படுத்தப்பட்டது.
- ❖ குழாய்க் கிணறு கனடா பழைய மாணவர் சங்கத்தினால் அமைத்துத் தரப்பட்டது.
- ❖ நவீன உலகிற்கு ஏற்றவாறு கணணி அறை பழைய மாணவர்களினால் நவீனமயப்படுத்தப்பட்டது.

   1. விக்கிரமசிங்கம் வளர்மதி
   2. விக்கிரமசிங்கம் தீபன்
   3. விக்கிரமசிங்கம் சதீஸ்
   4. சண்முகம் தவராஜசிங்கம்
   5. ஜெயபாலன் பத்மராணி
   6. பரமநாதன் கணேஸ்வரன்
   7. சிவராஜன் பத்மா
   8. ஸ்கந்தகுமார் மேகலா
   9. வையாபுரி பாலசுப்ரமணியம்
   10. வல்லிபரம் பிறைசூடி
   11. யோகரட்ணம் மீராசா

- ❖ 8 கணினிகள் பாடசாலைக்கு Care 4 Education (USA), Tamil Engineer Foundation (Australia) மூலம் அன்பளிப்பாக வழங்கப்பட்து.
- ❖ பாடசாலை மாணவர்களின் தண்ணீர் தேவைக்கு என நோர்வேயில் இருக்கும் பழைய மாணவர் திரு. தியாகராசா. தட்சணாமூர்த்தி குடும்பதினரால் தண்ணீர் தாங்கியும் அவற்றிற்கான நீர் இறைக்கும் இயந்திரமும் அன்பளிப்புச் செய்யப்படுகின்றது.

- ❖ கனடா பழைய மாணவர் சங்கத்தினரால் 12 துவிச்சக்கர வண்டிகள் மாணவர் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது.
- ❖ மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கும் பாடசாலைத் தேவைக்கும் என Photocopy Paper திருமதி. மங்கா கந்தையா என்பவரால் வழங்கப்பட்டது.
- ❖ பாடசாலைக்கு என ஒலிபெருக்கி சாதனம் பழைய மாணவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.
- ❖ மாணவர்களின் மதிய உணவுக்கு என பல பழைய மாணவர்கள் அன்பளிப்பு வழங்குகின்றனர்.
- ❖ வகுப்பறை பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக தடுப்புக்கள் (06) கனடா பழைய மாணவர் சங்கத்தினர் தந்து தற்காலிக வகுப்பறை அமைப்பதற்கு உதவி செய்துள்ளனர்.
- ❖ பாடசாலை ஆலயத்தின் பூசகருக்கான கொடுப்பனவு கனடா பழைய மாணவர் சங்கம் கொடுத்து உதவி புரிகின்றது.
- ❖ பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பருவகாலச் சீட்டுக்களுக்குரிய பணத்தை லண்டன் பழைய மாணவர் சங்கம் தந்து உதவி புரிகின்றது.
- ❖ புலமைப் பரிசில் சித்தியடைந்து எமது பாடசாலையில் கல்வி கற்கும் 03 மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதியை மாதாமாதம் லண்டன் பழைய மாணவர் சங்கம் வழங்குகின்றது.
- ❖ க.பொ.த சா/த 2017 இல் 8A, B தரச்சித்தி பெற்ற மாணவி செல்வி. இ. மதிஸ்ராவிற்கு கனடாவில் வசிக்கும் திரு. த. தவராஜசிங்கம் 50000/= வழங்கினார்.
- ❖ க.பொ.த உ/த 2020 இல் கல்வி கற்கும் மாணவர் ஒவ்வொருவரையும் ஊக்குவிற்பதற்காக மாதாந்தம் 2000/= திரு. த. தவராஜசிங்கம் வழங்குகின்றார்.
- ❖ செல்வி. இ. மதிஸ்ராவிற்கு கல்வி ஊக்குவிப்பு நிதியாக மாதாந்தம் 3000/= பணத்தினை திருமதி. புஸ்பராணி விக்கிரமசிங்கம் வழங்குகின்றார்.

**கல்லூரியின் தேவைகள்**

எமது கல்லூரி அனைத்து வளங்களையும் இழந்து மீண்டும் தனது சொந்த இடத்தில் மீள்குடியேறி துளிர் விட ஆரம்பித்து இருக்கிறது இதன் தேவைகள் ஏராளம்.

1. எமக்கு பல வகுப்பறைக் கட்டிடங்கள் பற்றாக்குறையாக உள்ளது. எதிர் காலத்தில் உயர்தர கணித விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்க உள்ளதுடன் மாணவர் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது. ஆகவே 130' x 25' அடி கொண்ட 3 மாடிக்கட்டிடம் தேவைப்படுகின்றது
2. முன்னைய காலத்தில் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் என தனித்தனியாக விஞ்ஞான ஆய்வுகூடம் இருந்த போதிலும் தற்போது ஒன்றுமில்லை எமக்கு அவசரமாகவும் அவசியமாகவும் விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்று தேவைப்படுகின்றது
3. நிரந்தரமான நூலக கட்டிடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்
4. மனைப்பொருளியல் ஆய்வு கூடம் அழகியல் பாடங்கள் கற்பிப்பதற்கான தனித்தனியாக அறைகள் தேவைப்படுகின்றது
5. அதிபர் அலுவலகம் இன்மையால் நிர்வாக செயற்பாடுகள் முன்னெடுப்பதில் பல சிரமங்கள் எதிர்கொள்கின்றோம். அதிபர், பிரதி அதிபர், நிர்வாக செயற்பாட்டிற்கென கட்டிடம் அமைக்கப்பட வேண்டும்.
6. நவீன கற்றல் கற்பித்தலுடன் நாமும் இணைந்து கொள்வதற்கு ஏற்றவாறு கணினி ஆய்வு கூடம் ஒன்றும் கணினி உபகரணங்களும் இன்னும் தேவைப்படுகின்றன.
7. ஆசிரியர்களின் வாகனங்கள், மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகள் என்பன திறந்த வெளியில் நிறுத்தப்படுகின்றது. இவை பாதுகாப்பாகவும் ஒழுங்காகவும் இருப்பதற்கு கொட்டகை ஒன்று தேவைப்படுகின்றது.
8. விளையாட்டு மைதானத்திற்கு ஒரு பவிலியன் தேவைப் படுகின்றது. அத்துடன் அங்கே மாணவர்கள் விருந்தினர்கள் பயன்பாட்டிற்கு என மலசலகூடமும் அமைக்கப் படவேண்டும்.
9. திறன் வகுப்பறை (Smart Class room)
   நவீன கற்றல் கற்பித்தல் மேற்கொள்வதற்கான திறன் வகுப்பறைகளை அமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.
10. band **உபகரணம்**

    எமது பாடசாலையின் பாண்ட் வாத்திய அணிக்கான உபகரணங்களின் தேவைப்பாடு காணப்படுகின்றது.

11. பாடசாலையினை வினைத்திறனுடன் நடாத்துவதற்காக நாளாந்தம் ஏற்படும் செலவீனங்களை ஈடு செய்ய பண உதவி தேவைப் படுகின்றது.
12. பாடசாலையின் சுற்று மதில் அமைக்கப்பட வேண்டும்.

## நிறைவுரை

கல்லூரி தான் அரவணைத்து ஏற்றுள்ள பிரதேச மாணவர்களை நிகழ்கால எதிர்கால வாழ்விற்கு தயார்ப்படுத்தல் எனும் நோக்குடன் செயற்படும் எமது கல்லூரிக்கு பல வழிகளில் உதவி புரிந்து வரும் வடக்கு மாகாண கல்விச் செயலாளருக்கும், மாகாணப் பணிப்பாளருக்கும், முன்னாள் செயலாளர்களுக்கும், எமது கல்லூரியின் வளர்ச்சியின் உற்ற துணை நிற்கும் எமது வலயக் கல்விப் பணிமனை பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள், எமது கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கு நன்றி கூறுவதில் அகமகிழ்வடைகின்றேன்.

கல்லூரியின் செயற்பாடுகளில் தோளோடு தோள் நின்று உதவி வரும் பிரதி அதிபர் திரு .செ. பிரகாஸ் மற்றும் எனது அன்பிற்குரிய ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள் பாசத்திற்குரிய மாணவ மணிகளுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்

எமது கல்லூரியை வளர்த்தெடுப்பதில் ஊக்கத்துடன் செயற்பட்டு வரும் எமது பழைய மாணவர் சங்கம் (தாய்) லண்டன் பழைய மாணவர் சங்கம் கனடா, பழைய மாணவர் சங்கம், கொழும்பு பழைய மாணவர் சங்கம் மற்றும் Offer, Unicef, Sond போன்ற அரசார்பற்ற நிறுவனங்கள் ஏனைய நாட்டிலிருக்கும் புலம் பெயர்ந்த எமது பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் உதவி புரிந்த பொலிஸ் இராணுவ பிரிவினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

இன்றைய விழாவின் பிரதம விருந்தினர் சிறப்பு விருந்தினர் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்த இப்பாடசாலையின் முன்னாள் அதிபர், ஆசிரியர்கள் எமது கோட்ட பாடசாலை அதிபர்கள் சகோதர பாடசாலை அதிபர்கள் அயற் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திக் குழு அங்கத்தவர்கள் பெற்றோர்கள் எமது பழைய மாணவர்கள் புலம் பெயர் தேசத்திலிருந்து வந்திருக்கும் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் நடேஸ்வரக் கல்லூரி அன்னையின் சார்பாக மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து இவ்வறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

# பரிசில் பெறுவோர் விபரம் - 2017 / 2018

## தரம் 06

| இல | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | இ. கேசவன் | சைவநெறி கணிதம் புவியியல் சித்திரம் ஆங்கிலம் விஞ்ஞானம் வரலாறு P.T.S தமிழ் சுகாதாரம் |
| 02 | சு. சுகன்தா | கத்தோலிக்கம் ஆங்கிலம் விஞ்ஞானம் வரலாறு சுகாதகரம் நடனம் P.T.S தமிழ் கணிதம் புவியியல் குடியியல் |
| 03 | அ. மேரி அபர்ணா | தமிழ் குடியியல் சங்கீதம் கத்தோலிக்கம் சுகாதாரம் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் வரலாறு P.T.S |
| 04 | ச. மேரி சர்மியா | கத்தோலிக்கம், புவியியல், குடியியல், நடனம் |
| 05 | யோ. டிபின்சிகா | நடனம் |
| 06 | யூ. நிக்சியா | சங்கீதம் |
| 07 | அ. சுஜிஸ்ரன் | சங்கீதம் |
| 08 | ம. மகிழ்கரன் | சித்திரம் |
| 09 | யோ. சாருஜன் | சித்திரம் |

**தரம் 7**

| இல | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | த. கனுசா | சைவநெறி கணிதம்<br>விஞ்ஞானம் வரலாறு<br>புவியியல் சுகாதாரம் சங்கீதம்<br>P.T.S<br>தமிழ் ஆங்கிலம் |
| 02 | அ. மேரிதில்சிகா | கத்தோலிக்கம் |
| 03 | யு. டெனிஸ்ரா | தமிழ்<br>சங்கீதம்<br>கத்தோலிக்கம் கணிதம்<br>வரலாறு |
| 04 | சி. குமரன் | ஆங்கிலம் சித்திரம்<br>விஞ்ஞானம் P.T.S<br>சைவநெறி கணிதம்<br>சுகாதாரம் புவியியல்,<br>குடியியல் |
| 05 | செ. வினுசியா | சைவநெறி தமிழ் ஆங்கிலம்<br>வரலாறு புவியியல், குடியியல்<br>விஞ்ஞானம் P.T.S |
| 06 | அ. அன்பு | கத்தோலிக்கம்<br>சங்கீதம் |
| 07 | அ. அபர்ணா | சித்திரம் |
| 08 | லோ. றோகான் | சித்திரம் |
| 09 | மு. சரணியா | கணிதம் சுகாதாரம் |

**தரம் 8**

| இல | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | ம. மனோஜன் | சைவநெறி சுகாதாரம்<br>ஆங்கிலம்<br>வரலாறு தமிழ் சங்கீதம்<br>கணிதம் |
| 02 | இ. வினுசன் | கத்தோலிக்கம் தமிழ்<br>விஞ்ஞானம் வரலாறு சங்கீதம்<br>புவியியல், குடியியல் P.T.S<br>சுகாதாரம் |
| 03 | சு. கெனிஸ்ரன் | கணிதம்<br>ஆங்கிலம் வரலாறு<br>புவியியல், P.T.S<br>கத்தோலிக்கம் தமிழ்<br>சுகாதாரம் சங்கீதம் |
| 04 | இ. தனுசன் | விஞ்ஞானம்<br>வரலாறு சங்கீதம் சுகாதாரம்<br>சைவநெறி கணிதம்<br>புவியியல் |
| 05 | ச. நிலாயினி | குடியியல் |
| 06 | அ. சுபா | சித்திரம், கத்தோலிக்கம்<br>தமிழ் |
| 07 | இ. பிரியா | புவியியல், சைவநெறி<br>ஆங்கிலம் |
| 08 | ஸ் துசாரா | சித்திரம், குடியியல் |
| 09 | ம. கரிசன் | விஞ்ஞானம் |
| 10 | சி. ஜேம்ஸ்ராஜ் | வரலாறு சித்திரம் P.T.S |

**தரம் 9**

| இல | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | வி. லேகா | சைவநெறி, குடியியல் |
| 02 | அ. றெம்சியா | கத்தோலிக்கம் தமிழ்<br>ஆங்கிலம் வரலாறு சங்கீதம்<br>சுகாதாரம் P.T.S<br>கணிதம் புவியியல்,<br>விஞ்ஞானம் |
| 03 | அ. நிதுஜன் | கணிதம்<br>தமிழ் வரலாறு புவியியல்,<br>P.T.S<br>கத்தோலிக்கம் |
| 04 | அ. அரியதாஸ் | சித்திரம் |
| 05 | ம. மேரிறஜனி | சைவநெறி ஆங்கிலம் |
| 06 | அ. மேரிசுஜானிகா | கத்தோலிக்கம்<br>P.T.S |
| 07 | ர. ராகுலன் | கணிதம்<br>புவியியல் குடியியல்<br>சுகாதாரம் |
| 08 | ம. மதுசன் | சித்திரம் |
| 09 | ஜெ. ஜெசிந்தன் | சைவநெறி |
| 10 | செ. றசிகா | ஆங்கிலம் |
| 11 | அ. அனுஜன் | சித்திரம் |
| 12 | உ. டனிஸ்ரன் | விஞ்ஞானம் |

**தரம் 10**

| இல | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | ப. பிரிதா | சைவநெறி, சித்திரம் |
| 02 | வி. டிலானி | கணிதம், விஞ்ஞானம், கத்தோலிக்கம், ஆங்கிலம், வரலாறு, தமிழ், சங்கீதம் மனைப் பொருளியல் |
| 03 | சு. சுஜிந்தன் | தமிழ், ஆங்கிலம்,கணிதம், விஞ்ஞானம், வரலாறு, சித்திரம், வணிகக்கல்வியும் கணக்கீடும், சுகாதாரமும் உடற்கல்வியும், கத்தோலிக்கம் |
| 04 | சோ. மேரிஜெறினா | சங்கீதம் |
| 05 | மு. குணாளினி | சித்திரம், சைவநெறி |
| 06 | இ. பானுஜா | குடியுரிமை, மனைப் பொருளியல் |
| 07 | இ. தர்சன் | வணிகக் கல்வியும் கணக்கீடும் |
| 08 | அ. அஜந்தா | சங்கீதம், மனைப் பொருளியல் |
| 09 | அ. அனுசா | குடியுரிமை, கிறிஸ்தவம் |
| 10 | த. சகிந்தன் | நாடகமும் அரங்கியலும் |
| 11 | இ. நிலோஜன் | கத்தோலிக்கம் |
| 12 | க. கோபிகா | சித்திரம் |
| 13 | சி. வானுப்பிரியா | நாடகமும் அரங்கியலும், வணிகக் கல்வியும் கணக்கீடும், ஆங்கிலம், சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 14 | மு. சானுகா | சைவநெறி, நடனம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 15 | ம. நிந்துசா | குடியுரிமை |
| 16 | ஜே. அன்ரனி சியானுசன் | கணிதம் |
| 17 | யோ. ருக்சாளினி | நடனம் |
| 18 | வி. டிலக்சன் | நாடகமும் அரங்கியலும் |

**தரம் 11**

| இல | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | இ. கிருஷ்ணராஜ் | சைவநெறி தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் வரலாறு குடியியற்கல்வி சுகாதாரமும் உடற்கல்வியும் சங்கீதம் |
| 02 | இ. கனிஸ்ரன் | கத்தோலிக்கம்<br>சங்கீதம்<br>சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 03 | இ. கேசனா | சித்திரம் மனைப்பொருளியல் சைவநெறி தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் வரலாறு குடியியற்கல்வி |
| 04 | அ. லேங்சன் | கத்தோலிக்கம் |
| 05 | த. சஞ்சீவன் | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 06 | ஸ்ரீ. கவிப்பிரியா | சித்திரம் மனைப்பொருளியல் சைவநெறி தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் வரலாறு குடியியற்கல்வி |
| 07 | ர. பவிக்கா | சித்திரம் மனைப்பொருளியல் |
| 08 | சி. தர்சன் | சங்கீதம் |

**தரம் 11 (2017)**

| இல | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | இ. மதிஸ்ரா | சைவநெறி தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் வரலாறு மனைப்பொருளியல் குடியியற்கல்வி சங்கீதம் |
| 02 | ச. சசிப்பிரியன் | கத்தோலிக்கம் சுகாதாரமும் உடற்கல்வியும் ஆங்கிலம் விஞ்ஞானம் குடியியற்கல்வி |
| 03 | சி. சஜிந்தன் | சித்திரம் கணிதம் சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 04 | க. விந்துஜா | சைவநெறி சங்கீதம் வரலாறு மனைப்பொருளியல் |
| 05 | ச. சாந்தமரியா | கத்தோலிக்கம் |
| 06 | க. டினோஜன் | தமிழ் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் வரலாறு சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 07 | த. தமிழ்ச்செல்வி | சைவநெறி தமிழ் மனைப்பொருளியல் குடியியற்கல்வி சங்கீதம் |

## நினைவுப் பரிசு

1. க.பொ.த(சா/த) தர சிறந்த பெறுபேறு – 2017
பெறுபவர்:- செல்வி. இ. மதிஸ்ரா
அமரர் சின்னையா செல்லத்துரை (முன்னைய ஆசிரியர்) ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திரு. செ. கிரிதரன்

2. க.பொ.த(சா/த) தர சிறந்த பெறுபேறு – 2018
பெறுபவர்:- செல்வன். இ. கிருஸ்ணராஜ்
அமரர் மாணிக்கம் செல்வராசா ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திரு. செ. பிரகாஸ்

3. தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தரம் - 6 இல் எமது பாடசாலையில் கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவன்
பெறுபவர்:- செல்வன் ஜீவன் அன்ரனி டினுஜன்
அமரர் கந்தையா சிவக்கொழுந்து ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- செலவி. க.இராஜேஸ்வரி

4. பொது அறிவுப்போட்டி
பிரதேச செயலகத்தின் கலாசாரப்போட்டி
பெறுபவர்:- செல்வன் ச. சசிப்பிரியன்
அமரர்கள் சுப்பையா சற்குணம் ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திரு. சு. கனகநாயகம்

5. சித்திரம்
T.P ஹென்றி ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட ஓவியப் போட்டிக்காக
பெறுபவர்:- செல்வி. ர. பவிக்கா
அமரர்கள் சின்னத்துரை இராசமணி ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திரு. இ. புஸ்பராசா

6. மனைப் பொருளியல் போட்டி வலய மட்டம்
பெறுபவர்:- செல்வி. வி.டிலானி
அமரர் கு. உரோகினி ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திரு. கு. விமலன்

7. விளையாட்டு – சிறந்த மெய்வல்லுநர் மாகாண மட்டம்
பெறுபவர்:- செல்வன். சி. சிவதர்சன்
அமரர் ந. குருசாமி ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திரு. கு. விமலன்

8. கட்டுரைப் போட்டி
சத்தியசாயி நிறுவனம் மாவட்ட ரீதியில் நடாத்திய அன்புவாரம் கட்டுரைப் போட்டி
பெறுபவர்:- செல்வி. செ. வினுசியா
அமரர் விஸ்வலிங்கம் சண்முகசுந்தரம் (பழைய மாணவன்) ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திருமதி. பு. திரவியச்செல்வம்

9. சிறுகதையாக்கம்
பெறுபவர்:- செல்வி. ஞா. சத்தியா
அமரர் த. இரத்தினசிங்கம் ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திரு.இ. விஜே

10. பேச்சுப் போட்டி
பெறுபவர்:- செல்வி. ஸ்ரீ. கஸ்தூரி
அமரர் த.தவமணி ஞாபாகார்த்தமாக
வழங்குபவர்:- திருமதி. உ. சிவகுமார்

11. தனி இசை
பெறுபவர்:- செல்வன். யு. யுவிஸ்ரன்
அமரர் த.இரத்தினசிங்கம் ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திருமதி. வி. ஜெகதீஸ்வரன்

12. கவிதையாக்கம்
பெறுபவர்:- செல்வி. இ. கேசனா
அமரர் ஐ. தம்பிராஜா ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திருமதி. ச.பரமசிவம்

13. சமூக விஞ்ஞானப் போட்டி மாகாணமட்டம்
பெறுபவர்:- செல்வன்.இ. கிருஸ்ணராஜ்
அமரர்கள் கிருஸ்ணபிள்ளை நாகமுத்து ஞாபகார்த்தமாக
வழங்குபவர்:- திரு. கி. மனோகரன்

## விசேட பரிசு

1. 2017 ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) தர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சிறந்த தேர்ச்சியைப் பெற்றமைக்காக செல்வி இ. மதிஸ்ரா அவர்களுக்கு Dr. சகுந்தலா ஞாபகார்த்த நிதியத்திலிருந்து ரூ. 5000 பணப்பரிசில் வழங்கப் படுகின்றது.

2. 2017 ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) தர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சிறந்த தேர்ச்சியைப் பெற்றமைக்காக செல்வன் க. டினோஜன் அவர்களுக்கு Dr. சகுந்தலா ஞாபகார்த்த நிதியத்திலிருந்து ரூ. 2500 பணப்பரிசில் வழங்கப் படுகின்றது.

3. 2017 ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) தர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சிறந்த தேர்ச்சியைப் பெற்றமைக்காக செல்வன் க. சசிப்பிரியன் அவர்களுக்கு Dr. சகுந்தலா ஞாபகார்த்த நிதியத்திலிருந்து ரூ. 1500 பணப்பரிசில் வழங்கப் படுகின்றது.

4. 2017 ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) தர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சிறந்த தேர்ச்சியைப் பெற்றமைக்காக செல்வன் சி. சசிந்தன் அவர்களுக்கு Dr. சகுந்தலா ஞாபகார்த்த நிதியத்திலிருந்து ரூ. 1000 பணப்பரிசில் வழங்கப் படுகின்றது.

5. 2018 ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) தர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சிறந்த தேர்ச்சியைப் பெற்றமைக்காக செல்வன் இ.கிருஸ்ணராஜ் அவர்களுக்கு Dr. சகுந்தலா ஞாபகார்த்த நிதியத்திலிருந்து ரூ. 5000 பணப்பரிசில் வழங்கப் படுகின்றது.

6. 2018 ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) தர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சிறந்த தேர்ச்சியைப் பெற்றமைக்காக செல்வி இ. கேசனா அவர்களுக்கு Dr. சகுந்தலா ஞாபகார்த்த நிதியத்திலிருந்து ரூ. 2000 பணப்பரிசில் வழங்கப் படுகின்றது.

7. 2018 ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) தர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சிறந்த தேர்ச்சியைப் பெற்றமைக்காக செல்வி ஸ்ரீ.கவிப்பிரியா அவர்களுக்கு Dr. சகுந்தலா ஞாபகார்த்த நிதியத்திலிருந்து ரூ. 1500 பணப்பரிசில் வழங்கப் படுகின்றது.

8. 2018 ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) தர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சிறந்த தேர்ச்சியைப் பெற்றமைக்காக செல்வி ர. பவிக்கா அவர்களுக்கு Dr. சகுந்தலா ஞாபகார்த்த நிதியத்திலிருந்து ரூ. 1500 பணப்பரிசில் வழங்கப் படுகின்றது.

9. 2018 ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) தர பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் A தரச்சித்தியை பெற்றமைக்காக செல்வன். இ.கிருஸ்ணராஜ் அவர்களுக்கு ரூ. 3000 பணப்பரிசில் பழைய மாணவனும், ICT பாட ஆசிரியருமான திரு. இ. குமரன் அவர்களால் வழங்கப் படுகின்றது.

**2017** ஆம் ஆண்டு சிறந்த மாணவராக தெரிவு செய்யப்பட்ட செல்வி இ. மதிஸ்ரா அவர்கள், அமரர்கள் சின்னையா செல்லத்துரை ஞாபகார்த்தமாக வழங்கப்படும் பரிசைப் பெற்றுக் கொள்கின்றார்.

**2018** ஆம் ஆண்டு சிறந்த மாணவராக தெரிவு செய்யப்பட்ட செல்வன் இ. கிருஸ்ணராஜ் அவர்கள், அமரர்கள் சின்னையா செல்லத்துரை ஞாபகார்த்தமாக வழங்கப்படும் பரிசைப் பெற்றுக் கொள்கின்றார்.

# கல்வி சார் ஆளணியினர் விபரம்- 2019

| இல | ஆசிரியர் பெயர் | கல்வித் தகைமை | தொழிற் தகைமை | தரம் |
|---|---|---|---|---|
| 1. | திரு. கு. விமலன் | B.Ed | M.Ed, PGDEM | SLPS - I |
| 2. | திரு. செ. பிரகாஸ் | B.Ed | N.D.T(Maths) | SLPS - III |
| 3. | திருமதி. ஜெ. சந்திரகுமாரன் | B.Ed | Sp.Trd(Maths) | SLTS 2(I) |
| 4. | திருமதி. கா. பார்த்தீபன் | B.A, M.A | Dip in Edu, M.Ed, | SLTS 2(I) |
| 5. | திரு. பு. திரவியச் செல்வம் | G.C.E(A/L) | Sp.Trd(Com) | SLTS 1 |
| 6. | செல்வி. க. இராஜேஸ்வரி | B.A, M.A | Dip in Edu | SLTS 1 |
| 7. | திருமதி. உ. சிவகுமார் | B.A | Dip in Edu | SLTS 2(I) |
| 8. | திருமதி. வி. ஜெகதீஸ்வரன் | B.A | Dip in Edu | SLTS 1 |
| 9. | திருமதி. ப. சுதாகரன் | B.A | - | SLTS 2(II) |
| 10. | திரு. ஏ. சிறிறங்கன் | G.C.E(A/L) | Sp.Trd(Com) | SLTS 3(I) |
| 11. | திரு. சு. பகீரதன் | B.Ed | N.D.T(Maths) | SLTS 2(II) |
| 12. | திருமதி. கீ. மதிரூபன் | B.Sc | N.D.T(Maths E.M) | SLTS 3(I) |
| 13. | திருமதி. சு. கிருஸ்ணா | B.Ed | N.D.T(SCi) | SLTS 2(II) |
| 14. | திருமதி. அ. நிகாந்தன் | B.F.A | Dip in Edu | SLTS 2(I) |
| 15. | திருமதி. ச. பரமசிவம் | B.A | Dip in Edu | SLTS 2(I) |
| 16. | திரு. அ. ஜெயந்தன் | G.C.E(A/L) | Dip in Phy. Edu | SLTS 3(I) |
| 17. | செல்வி. இ. ஜீன் பிரவீனா | B.Ed | N.D.T (Li. Sc) | SLTS 2(II) |
| 18. | திருமதி. ப. உமா வாகீசர் | B.A, M.A in Edu | Dip in Edu | SLTS 2(II) |
| 19. | செல்வி. செ. சசிமாலா | B.A | Dip in Edu | SLTS 2(II) |
| 20. | திரு.சோ. பிரசாந்தன் | B.A | - | SLTS 3(I) |
| 21. | செல்வி. இ. அனுசா | B.A | - | SLTS 3(I) |
| 22. | திருமதி.ப. பாலகிருஸ்ணா | B.A | Dip in Edu | SLTS 1 |
| 23. | திருமதி. அ. ஜெயசீலன் | B.A | Dip in Edu | SLTS 2(II) |

| | | | | |
|---|---|---|---|---|
| 24. | திரு. இ. விஜெ | G.C.E(A/L) | - | SLTS 3(II) |
| 25. | செல்வி. சா. சிவப்பிரகாசம் | G.C.E(A/L) | Sp.Trd(H. Eco) | SLTS 1 |
| 26. | திருமதி. சி. றதீஸ்குமார் | B.A | Dip in Edu | SLTS 2(II) |
| 27. | திரு. கு. கிரிசாந் | G.C.E(A/L) | - | SLTS 3(II) |

**கல்விசாரா ஊழியர்கள் விபரம்**

1. **திரு. க. ஜலயன்**
2. **திரு. க. தர்சன்**

## பரிசளிப்பு விழாக்குழு

1. திரு. குருசாமி விமலன் (அதிபர்)
2. திரு. செல்வராசா பிரகாஷ் (பிரதி அதிபர்)
3. திருமதி. ஜெயலோஜினி சந்திரகுமாரன்
4. திருமதி. பவானி உமாவாகீசர்
5. திருமதி. உமா சிவகுமார்
6. திரு. சுப்ரமணியம் பகீரதன்
7. திரு. ஏகாம்பரநாதன் ஸ்ரீரங்கன்
8. திருமதி. சந்தானலட்சுமி பரமசிவம்
9. திருமதி. விஜயசாந்தி ஜெகதீஸ்வரன்
10. செல்வி. இராசலிங்கம் ஜீன் பிரவீனா
11. செல்வி. சாந்தி சிவப்பிரகாசம்
12. திரு.இ. விஜெ
13. திருமதி. கா. பார்த்தீபன்

## பாடசாலைக்கீதம்

போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம்

புகழும் நீதி கலைகள் மேவும் சிகரமாக திகழும் தாயை

போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம்

பொலியும் ஆழி வளங்கள் யாவும் நிறை காங்கேசன்துறையிலே

பொறையின் நேர்மை நெறியில் நீதி அறிவை ஊட்டும் முறையிலே

கலைநலங்கள் எழில் பெறும் நடேஸ்வரக் கல்லூரியில்

கருணை வெள்ளம் பெருகி ஞான அருவி ஊறும் வாரியை

போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம்

ஆங்கில மொழி ஓங்கி விளங்க ஆய்ந்த செந்தமிழ்க் காவியம்

ஆரியமிசைக் கீத நடனம் அரிய கணிதம் ஓவியம்

பாங்கு மிகுந்த சாஸ்திரத்துடன் பயிற்சித் தொழில்கள் யாவுமே

பாலித்தருளும் பாண்மை பெருக பானு நிகர வாழ்கவே!

போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம்

## மகுடவாசகம் (Motto)

"நேர்மை நெறி நில்"

## நோக்கக்கூற்று (Vision)

நேர்மையும் சமூகப் பொறுப்பும் அறிவுமிக்க குடிமக்களை உருவாக்குதல்.

## பணிக்கூற்று (Mission)

அறிவார்வமிக்க மாணவர்களதும் விழ்ப்புணர்வுள்ள பெற்றோர்களதும் பொறுப்புணர்வுமிக்க சமூக நிறுவனங்களினதும் வினைத்திறன் மிக்க பங்களிப்பை உறுதிப்படுத்துமாறு தொழிற்படல்.

**பரிசளிப்பு விழாவிற்கு அனுசரணை வழங்கி யவர்கள்**

- திரு செ. சண்முகநாதன்(லண்டன்) -ரூ. 50000
- சர்வதேச நடேஸ்வரன் நம்பிக்கை நிதியம் (கனடா) -ரூ. 50000
- திரு. சி . துமிலன்(கொழும்பு) -ரூ. 50000











**Akshatha - Maviddapuram**
**0771758481**